DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

| | | |
|---|---|---|
| STC.NO. | Crime No.: | Station : |
| Sworn Statement of witness | C.MP. 2905/2024 | DVC : |

| | | | |
|---|---|---|---|
| Name | சத்தியமூர்த்தி | Caste | |
| Father's Name | வெங்கடாசலம் | Calling | சிவில் இன்ஜினியர் |
| Village | சத்தியமங்கலம் | Religion | |
| Taluk | | Age | 40 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of | | | 21.02.2025 |

**முதல் விசாரணை:**

1. புகார்தாரர் எனது தாய்மாமா. 1983-ம் வருடம் எனது அம்மாவின் அப்பா குமாரசாமிக் கவுண்டர் என்பவருக்குப் பாத்தியப்பட்ட சொத்தை குமாரசாமிக் கவுண்டரின் மனைவி ராஜம்மாள், மகன்கள் ஜனநாயகம், சந்திரசேகர், மகாதேவன், குமார ரவிக்குமார், என் அம்மா சகுந்தலா ஆகியோருக்குள் பாகப்பிரிவினை செய்து பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பாகப்பிரிவினையானது என் அம்மாவின் திருமணத்திற்கு முன்பே நடைபெற்றுவிட்டது. சத்தியமங்கலத்திலுள்ள க.ச.எண்.314/1, 3 ஆகிய காலைகளில் 2 ஏக்கர் என் அம்மாவிற்கு செக்குபந்தி போட்டு மேற்படி பாகப்பிரிவினையில் ஒதுக்கப்பட்டது.

2. என்னுடைய தாய்மாமா சந்திரசேகருக்கு சத்தியமங்கலத்திலுள்ள க.ச.எண்.314/1, 3 ஆகிய காலைகளில் 4.41 ஏக்கர் செக்குபந்தி போட்டு மேற்படி பாகப்பிரிவினையில் ஒதுக்கப்பட்டது. என்னுடைய தாய்மாமா குமாரவிக்குமாருக்கு சத்தியமங்கலத்திலுள்ள க.ச.எண்.314/1, 3 ஆகிய காலைகளில் 3.59 ஏக்கர் செக்குபந்தி போட்டு மேற்படி பாகப்பிரிவினையில் ஒதுக்கப்பட்டது. என் பாட்டி ராஜம்மாளுக்கு க.ச.எண்.314/1, 3 ஆகிய காலைகளில் 2 ஏக்கர் செக்குபந்தி போட்டு மேற்படி பாகப்பிரிவினையில் ஒதுக்கப்பட்டது. எனது பாட்டி விவசாயம் செய்யவில்லை. என் பாட்டிக்கு ஒதுக்கப்பட்டிருந்த 2 ஏக்கர் பூமியை எனது தாய்மாமாக்கள் ரவிக்குமாரும், சந்திரசேகரும் ஆளுக்கொரு ஏக்கர் பூமியாக

பிரித்து விவசாயம் செய்து வந்தார்கள். எனது பாட்டிக்கு 2 ஏக்கர் ஒதுக்கீடு செய்தபோது வாழ்நாள் பாத்தியம் கொடுக்கப்பட்டு அவர் காலத்திற்குப் பின்னிட்டு தலா 1 ஏக்கர் பூமியை எனது 2 மாமாக்களுக்கும் போய்ச் சேரத்தக்கது என்று பாகப்பிரிவினை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

3. 1998–ம் ஆண்டு எனது பாட்டி ராஜாம்மாளுக்குப் பாத்தியப்பட்டிருந்த 2 ஏக்கர் பூமியில் 50 சென்ட் பூமியை செக்குபந்தி கண்டு என் அம்மா சகுந்தலாவிற்கு பரிவர்த்தனை ஆவணம் மூலமாக கொடுக்கப்பட்டது. எனது அம்மா சகுந்தலாவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த 2 ஏக்கர் பூமியை 50 சென்ட் செக்குபந்தி கண்டு எனது பாட்டி ராஜம்மாளுக்கு மேற்படி பரிவர்த்தனை ஆவணம் மூலமாக கொடுக்கப்பட்டிருந்தது. என் அம்மா பரிவர்த்தனை ஆவணம் மூலமாக என் பாட்டிக்குக் கொடுத்த 50 சென்ட் பூமியை எனது பாட்டி 1998–ம் வருடம் 3ம் நபருக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார்கள். எனது மாமா ரவிக்குமார் விவசாயம் செய்து வந்த எனது பாட்டிக்குப் பாத்தியப்பட்டிருந்த 1 ஏக்கர் பூமியில் உள்ள 50 சென்ட் பூமியைத்தான் பரிவர்த்தனை மூலமாக என் அம்மாவிற்கு கொடுத்துவிட்டார்கள்.

4. என் பாட்டிக்குப் பாத்தியப்பட்டிருந்த மீதமுள்ள 50 சென்ட் பூமியை எனது மாமா ரவிக்குமார் விவசாயம் செய்து வந்தார். பாகப்பிரிவினை ஆவணப்படி சர்வேயர் வைத்து அளக்கப்படாமல்தான் அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த பூமியை அவரவர்கள் அனுபவித்து வந்தார்கள். 2009–ம் ஆண்டு எனது மாமா குமார ரவிக்குமார் என்பவர் அவரது அண்ணனான சந்திரசேகர் என்பவரிடம் சர்வேயர் வைத்து நிலத்தை அளந்துகொல்லலாம் எனக் கேட்டப்போது சந்திரசேகர் சர்வேயர் வைத்து அளக்க மறுப்புத் தெரிவித்தார். சந்திரசேகர் மாமாவிற்கு ஒதுக்கப்பட்டிருந்த 4.41 ஏக்கர் பூமியிலுள்ள கிணறானது ராஜம்மாள், சந்திரசேகர், சகுந்தலா ஆகியோருக்கு பொதுவான கிணறு. ஆனால் என் அம்மாவிற்கு ஒதுக்கப்பட்டிருந்த 2 ஏக்கர் பூமிக்கு பொதுக் கிணறிலிருந்து விவசாயத்திற்கு தண்ணீர் எடுக்க விடாமல் கேட்வால் வைத்து 2007–ம் ஆண்டு அடைத்துவிட்டார்.

5. 2009–ம் ஆண்டு எனது மாமா குமார ரவிக்குமார் மேற்படி சொத்தை அளப்பதற்காக சத்தி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் சந்திரசேகர் மீது அசல் வழக்கு ஒன்றைத்

தாக்கல் செய்தார். மேற்படி வழக்கு நிலுவையிலிருக்கும்போது சந்திரசேகரும், அவரது மனைவி கிருஷ்ணவேணியும் அவர்கள் அனுபவப் பாத்தியத்திலுள்ள நிலத்தைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி குமாரரவிக்குமார் மற்றும் சகுந்தலா ஆகியோர்கள் மீது சத்தி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் சந்திரசேகர் மீது அசல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்தார்.

6. மேற்படி வழக்கு நிலுவையிலிருந்தபோதுதான் சந்திரசேகர் அவருக்கு க.ச.எண்.314/1, 3 காலைகளில் 4.70 ஏக்கர் பூமி பாத்தியம் இருப்பதாகவும் அதில் 30 சென்ட்டைப் பொறுத்து அவரது மனைவி கிருஷ்ணவேணி என்பவருக்கு 2005ம் ஆண்டு ஒரு தான செட்டில்மென்ட் ஆவணம் எழுதி பதிவு செய்யப்பட்டிருந்தது தெரியவந்தது. 2005–ம் ஆண்டு எனது பாட்டி ராஜம்மாள் உயிருடன் இருக்கும்போதே பொதுவில் 30 சென்ட் என்று எனது அத்தை கிருஷ்ணவேணிக்கு தான செட்டில்மென்ட் எழுதி வைத்துள்ளார். குமாரரவிக்குமார் தாக்கல் செய்த வழக்கு சுமார் 1 வருடத்திற்குள் தள்ளுபடியானது. சந்திரசேகர் மற்றும் கிருஷ்ணவேணி தாக்கல் செய்திருந்த வழக்கில் குமார ரவிக்குமார் மற்றும் சகுந்தலா ஆகியோருக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது.

7. குமார ரவிக்குமார் அவரது தள்ளுபடியான வழக்கிற்கெதிராக சத்தி சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு வழக்கு செய்து அந்த வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. மீண்டும் குமாரரவிக்குமார் உயர்நீதிமன்றத்தில் 2வது மேல்முறையீடு தாக்கல் செய்து 1 மாதத்திற்கு முன்பு குமாரரவிக்குமார் அவர்களுக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது. அதில் 1983 பாகப்பிரிவினை ஆவணப்படி சர்வேயர் வைத்து அளந்து அத்து நிர்ணயம் செய்ய வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

8. மேற்படி மேல்முறையீடு வழக்குகள் நிலுவையிலிருந்தபோது சந்திரசேகர் அவருக்கு பாத்திப்பட்ட நிலத்தைக் குறைத்து 5 ஏக்கருக்குள் இருப்பதாகக் கூறி குறு விவசாயி என்ற சான்றிதழை, சத்தி குரூப் கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சான்றுபோல் போலியாக தயார் செய்து சத்தி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் குறு விவசாயிகளுக்கு வழங்கப்படும் கடனை பெற்றுள்ளார்கள்.கிருஷ்ணவேணி அவருக்கு தானசெட்டில்மென்ட்

பாத்திரத்தில் கிடைத்த 30 சென்ட் நிலத்தை விட அதிகமாக 3.50 ஏக்கர் இருப்பதாகக் கூறி குறு விவசாயி என்ற சான்றிதழை, சத்தி குரூப் கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சான்றுபோல் போலியாக தயார் செய்து சத்தி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் குறு விவசாயிகளுக்கு வழங்கப்படும் கடனை பெற்றுள்ளார்கள். விவசாயக் கடன் தள்ளுபடி திட்டத்தில் மேற்படி இரு கடன்களும் 2010, 2011–ம் வருடம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

9. என்னுடைய மற்றொரு தாய்மாமா மகாதேவன் என்பவரின் மகன் குமாரராஜா என்பவர் கூட்டுறவு சங்கப் பதிவாளரிடம் மேற்படி இரு கடன்கள் குறித்து புகார் ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார். பின்பு கூட்டுறவுத் துறை, வருவாய்த்துறை விசாரணை மேற்கொள்ளப்பட்டு தள்ளுபடியான கடன்தொகையை மேற்படி இருவரும் மீண்டும் சத்தி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் செலுத்திவிட்டார்கள். போலி ஆவணங்கள் தயார் செய்து தாலுக்கா ஆபிஸ் முதல் மாவட்ட ஆட்சியர் வரை எங்களை தொடர்ந்து அளக்கழித்து வருகிறார்கள். அசல் வழக்கில் அட்வகேட் கமிசனர் வந்து மேற்படி நிலங்களைப் பார்வையிட்டு சென்றுள்ளனர். கிருஷ்ணவேணிக்கு எழுதிக்கொடுத்த போலி தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்து அதன் மூலமாக எங்களுடைய சொத்து அபகரிப்பு செய்துள்ளனர். எனவே, எதிரிகளின் மீது நடவடிக்கை மேற்கொண்டு எதிரிகளுக்கு தண்டனை வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.